# மாதிரி வினாத்தாள் – 2019–20

**வகுப்பு : 10** **பாடம் : தமிழ் இரண்டாம் தாள்**

**கால அளவு : 15 நிமிடம் + 2.30 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 100**

**(இலக்கணம், துணைப்பாடம், மொழிப்பயிற்சி, கட்டுரை, கடிதம்)**

## பகுதி – I

**மதிப்பெண்கள் : 14**

**I பலவுள் தெரிக.** **14 X 1 = 14**

1. 'வாய்மையே மழைநீராகி' என்னும் தொடரில் வெளிப்படும் அணி –
   - அ. உவமை
   - ஆ. தற்குறிப்பேற்றம்
   - இ. தீவகம்
   - ஈ. உருவகம்
2. இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் –
   - அ. நாட்டைக் கைப்பற்றுதல்
   - ஆ. வலிமையை நிலைநாட்டல்
   - இ. ஆநிரை கவர்தல்
   - ஈ. கோட்டையை முற்றுகையிடல்
3. தொடர்மொழி
   - அ. ஆடு மேய்ந்தது
   - ஆ. அந்தமான்
   - இ. அம்மா அ
   - ஈ. அசையாமை
4. தற்குறிப்பேற்றம் – பிரித்து எழுதுக.
   - அ. தன் + குறிப்பு + யேற்றம்
   - ஆ. தன் + குறிப்பு + ஏற்றம்
   - இ. தங் + குறிப்பு + ஏற்றம்
   - ஈ. தன் + குறிப் + ஏற்றம்
5. பாடலின் பல அடிகளில் சிதறி இருக்கும் சொற்களைப் பொருளுக்கு ஏற்றவாறு ஒன்று சேர்த்துப் பொருள் கொள்ளுவது.
   - அ. முறைநிரைல்நிறைப் பொருள்கோள்
   - ஆ. கொண்டுகூட்டுப் பொருள்கோள்
   - இ. எதிர்நிரல்நிறைப் பொருள்கோள்
   - ஈ. ஆற்றுநீர்ப் பொருள்கோள்
6. '<u>வடித்த கஞ்சியில்</u> சீலையை அலசினேன்' என்னும் தொடரில் அடிக்கோடிட்ட தொடரின் வகை –
   - அ. வினையெச்சத் தொடர்
   - ஆ. வினைமுற்றுத் தொடர்
   - இ. பெயரெச்சத் தொடர்
   - ஈ. எழுவாய்த் தொடர்
7. முக்காலத்திற்கும் பொருந்தும்படி வருவது –
   - அ. வினைத்தொகை
   - ஆ. பெயரெச்சம்
   - இ. வினையெச்சம்
   - ஈ. அன்மொழித்தொகை

8. குலசேகர ஆழ்வார் 'வித்துவக்கோட்டம்மா' என ஆண் தெய்வத்தை விளித்துப் பாடுகிறார். இத்தொடரில் இடம்பெற்றுள்ள வழுவமைதி –

அ. மரபு வழுவமைதி

ஆ. இட வழுவமைதி

இ. திணை வழுவமைதி

ஈ. பால் வழுவமைதி

9. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது –

அ. வேற்றுமை உருபு

ஆ. எழுவாய்

இ. உவம உருபு

ஈ. உரிச்சொல்

10. அகப்பொருள் –

அ. மனம் சார்ந்தது

ஆ. நானிலம் பற்றியது

இ. அன்பின் ஐந்திணை

ஈ. போர் புரிவது

11. மூன்று அடி முதல், எழுதுபவர் மனநிலைக்கேற்ப அமையும் பாவகை –

அ. வெண்பா

ஆ. வஞ்சிப்பா

இ. கலிப்பா

ஈ. ஆசிரியப்பா

12. பொருத்தமான விடையைத் தேர்க.
''இங்கு மாநகரப் பேருந்து நிற்குமா'' என்று வழிப்போக்கர் கேட்டது ........... வினா. ''அதோ அங்கே நிற்கும்'' என்று மற்றொருவர் கூறியது ........... விடை.

அ. ஐயவினா, வினா எதிர்வினாதல்விடை

ஆ. அறியாவினா, சுட்டுவிடை

இ. அறிவினா, மறைவிடை

ஈ. கொளல்வினா, இனமொழி விடை

13 'நடவாமை' என்னும் சொல் –

அ. முதனிலைத் தொழிற்பெயர்

ஆ. வினையாலணையும் பெயர்

இ. எதிர்மறைத் தொழிற்பெயர்

ஈ. விகுதிபெற்ற தொழிற்பெயர்

14 'மூதூர்' என்பதன் இலக்கணக் குறிப்பு –

அ. பண்புத்தொகை

ஆ. உவமைத்தொகை

இ. அன்மொழித்தொகை

ஈ. வினைத்தொகை

## பகுதி – II
## மதிப்பெண்கள் : 20

**பிரிவு – 1** **5 X 2 = 10**

**எவையேனும் ஐந்தனுக்கு விடையளிக்க.**

15. நயமிகு தொடர்களைப் படித்து ஏற்ற தலைப்புகள் தருக.

அ) நின்றுவிட்ட மழை தரும் குளிர்; சொட்டுச் சொட்டாக விளிம்புகளிலிருந்தும் மரங்களிலிருந்தும் விழும் மழைநீர்பட்டுச் சிலிர்க்கும் உயிரினம்.

ஆ) குயில்களின் கூவலிசை, புள்ளினங்களின் மேய்ச்சலும் பாய்ச்சலும், இலைகளின் அசைவுகள், சூறைக்காற்றின் ஆலோலம்.

16. ஆலும் வேலும் பல்லுக்குறுதி
நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி

இத்தொடர்கள் உணர்த்தும் மரங்களின் பெயர்களையும், தமிழெண்களையும் எழுதுக.

17. இன்று உங்கள் உடன்பிறந்தவரின் பிறந்தநாள். அவருக்கு வாழ்த்து ஒன்றைத் தூய தமிழில், கைபேசிப் புலனச் செய்தியாக உருவாக்குக.

18. கலைச்சொல் தருக.

Modern Literature, Epic Literature

19. சொற்களை இணைத்துப் பொருத்தமான தொடரை உருவாக்குக.

தேன், பொன், மழை, விலங்கு

20. மரபுத் தொடர்களுக்கான பொருளறிந்து தொடரில் அமைக்க.

கண்ணும் கருத்தும், வாழையடி வாழை

21. தனிச் சொற்றொடர்களாக மாற்றுக.

அ) அழைப்பு மணி ஒலித்ததும், கயல்விழி கதவைத் திறந்தாள்.

ஆ) ஓடிக்கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன், அறையில் உள்ளவர்களின் பேச்சுத் தடைபட்டது.

**பிரிவு – 2** **5 X 2 = 10**

**எவையேனும் ஐந்தனுக்கு விடையளிக்க.**
**(28 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க)**

22. குறள் வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டுத் தருக.

23. ஆற்றுநீர்ப் பொருள்கோள் எவ்வாறு அமையும் ?

24. அடிக்கோடிட்ட தொகைச்சொற்களை வகைப்படுத்துக.

அ) அன்புச்செல்வன் திறன்பேசியின் தொடுதிரையில் படித்துக்கொண்டிருந்தார்.

ஆ) தங்கமீன்கள் தண்ணீர்த்தொட்டியில் விளையாடுகின்றன.

25. கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக.

உழவர்கள் மலையில் உழுதனர்.

முல்லைப் பூச் செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.

26. வருகின்ற கோடை விடுமுறையில் கல்லணையைக் காண்பதற்குச் செல்கிறேன் – இத்தொடர் கால வழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைவது எவ்வாறு ?

27. கூட்டுநிலைப் பெயரெச்சத்திற்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

28. **அறியேன்** – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

## பகுதி – III
## மதிப்பெண்கள் : 50

### பிரிவு – 1  2 X 5 = 10

**எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்க.**

29. கவிஞர், தாம் கூறவிரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு அவர்தம் கவிதைகளில் தற்குறிப்பேற்ற அணி அமைவதை எடுத்துக்காட்டுக.

30. செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரிய தில் – **அலகிட்டு வாய்பாடு தருக.**

31. அவந்தி நாட்டு மன்னன், மருதநாட்டு மன்னனுடன் போர்புரிந்து அந்நாட்டைக் கைப்பற்ற நினைக்கிறான்; அப்போர் நிகழ்வைப் புறப்பொருள் வெண்பாமாலை கூறும் இலக்கணத்தின் வழி விளக்குக.

### பிரிவு – 2  4 X 5 = 20

**எவையேனும் நான்கனுக்கு விடையளிக்க.**
**(37 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க.)**

32. அட்டவணையில் விடுபட்டவற்றைத் தனியே எடுத்தெழுதுக.

| வேர்ச்சொல் | எழுவாய்த் தொடர் | பெயரெச்சத் தொடர் | வினையெச்சத் தொடர் | விளித் தொடர் | வேற்றுமைத் தொடர் |
|---|---|---|---|---|---|
| தா | | தந்த அரசர் | | அரசே தருக! | |
| சொல் | அம்மா சொன்னார் | | சொல்லிச் சென்றார் | | கதையைச் சொன்னார் |

33. பின்வரும் தொடரில் விடுபட்ட **வண்ணக் குறிப்புகளை** உங்களின் **எண்ணங்களால் பொருத்தமுற** நிரப்புக.

கண்ணுக்குக் குளுமையாக இருக்கும் . . . . . . . . புல்வெளிகளில், கதிரவனின் . . . . . . . . வெயில் பரவிக் கிடக்கிற வேளையில், சட்டென வானம் . . . . . . . . . . தொடங்கியது. மழைவரும் போலிருக்கிறது. சடசடவெனக் கொட்டித்தீர்த்த மழைக்குப் பிறகு வானம் . . . . . . . . . தொடங்கியது. அதனைத் தொடர்ந்து கீழ்வானம் . . . . . . . .

**குறிப்புகள்** : மஞ்சள், பசுமை, சிவத்தல், கருத்தல், வெளுத்தல்

34. ஒவ்வொரு சூழலிலும் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்தபடி இருக்கிறார்கள்; உதவி பெற்றபடியும் இருக்கிறார்கள்; சில உதவிகள் அவர்கள் மீதுள்ள அன்பினால் செய்கிறோம்; சில உதவிகள் இரக்கத்தால் செய்கிறோம்.
நீங்கள் செய்த, பார்த்த உதவிகளால் உங்களுக்கும் உதவி பெற்றவருக்கும் ஏற்பட்ட மனநிலைகள் ஐந்தனை எழுதுக.

35. படத்தைப் பார்த்துக் கவிதையைத் தொடர்க.



தண்ணீர் நிறைந்த குளம்

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

36. அரசால் நிறுவப்படும் கட்டடங்களிலும் சிலைகளிலும் நிறுவியர் பெயர், நிறுவப்பட்ட காலம், நோக்கம் சார்ந்த பிறசெய்திகள் தாங்கிய கல்வெட்டுகளைப் பார்த்திருப்பீர்கள். இவைபோன்று நீவிர் கண்ட பல்வேறு பழமையான நினைவுச்சின்னங்களைப் பாதுகாத்துப் பராமரித்துக் காக்கும் வழிமுறைகள் ஐந்தனைப் பட்டியலிடுக.

**பாடலின் இலக்கிய நயத்தை உணர்ந்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிக்க.**

37. நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்
நேர்ப்பட வைத்தாங்கே
குலாவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு
கோல வெறிபடைத்தோம்;
உலாவும் மனச்சிறு புள்ளினை எங்கணும்
ஓட்டி மகிழ்ந்திடுவோம்;
பலாவின் கனிச்சுளை வண்டியில் ஓர் வண்டு
பாடுவதும் வியப்போ ?

**– பாரதியார்**

(i) பாடலில் அமைந்துள்ள எதுகைச் சொற்களை எடுத்தெழுதுக.

(ii) பாடலில் இடம்பெற்றுள்ள கற்பனை நயம் ஒன்றினை எழுதுக.

(iii) மோனைச் சொற்களைப் பாடலிலிருந்து எடுத்தெழுதுக.

(iv) பாடலில் பாரதியார் உணர்த்தும் மையக்கருத்து யாது ?

(v) பாடலின் இயைபு நயத்தினைக் குறிப்பிடுக.

## பிரிவு – 3 2 X 5 = 10

**எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்க.**

38. அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் **'கோபல்லபுரத்து மக்கள்**' கதைப்பகுதி கொண்டு விவரிக்கவும்.

39. பின்வரும் அழைப்பிதழில் உள்ள நிகழ்வுகளைத் தொகுத்து **அறிக்கை** ஒன்று எழுதுக.

| |
|---|
| **<u>மகளிர் நாள் விழா</u>** |
| இடம் – பள்ளிக் கலையரங்கம் நாள் : |
| கலையரங்கத்தில் ஆசிரியர், மாணவர் கூடுதல் – தமிழ்த்தாய் வாழ்த்து – தலைமையாசிரியரின் வரவேற்பு – கலை நிகழ்ச்சிகள் – பெண் வெற்றியாளர்களாக மாணவர்களின் மாறுவேட நிகழ்வு – சிறப்பு விருந்தினர் இதழாளர் கலையரசி அவர்களின் சிறப்புரை – ஆசிரியர்களின் வாழ்த்துரை – பங்குபெற்ற மாணவர்களுக்குப் பரிசு – மாணவர் தலைவரின் நன்றியுரை – நாட்டுப்பண். |

40. **'கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே'** என்கிறது வெற்றிவேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.

## பிரிவு – 4 2 X 5 = 10

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.**

41. கொடுக்கப்பட்டுள்ள மேல்நிலை வகுப்புச் சேர்க்கை விண்ணப்பப் படிவத்தினை நிரப்புக.

<u>மேல்நிலை வகுப்பு – சேர்க்கை விண்ணப்பப் படிவம்</u>

1. மாணவரின் பெயர் :
2. பிறந்த தேதி :
3. தேசிய இனம் :
4. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் :
5. வீட்டு முகவரி :
6. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு :
7. பயின்ற மொழி :
8. பெற்ற மதிப்பெண்கள் :
9. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி :
10. பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் :

| தேர்வின் பெயர் | பதிவெண்– ஆண்டு | பாடம் | மதிப்பெண் (100) |
|---|---|---|---|
| | | தமிழ் | |
| | | ஆங்கிலம் | |
| | | கணிதம் | |
| | | அறிவியல் | |
| | | சமூக அறிவியல் | |
| | | மொத்தம் | |

11. மாற்றுச்சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா ? :
12. தாய்மொழி :
13. சேரவிரும்பும் பாடப் பிரிவும் பயிற்று மொழியும் :

இடம் : மாணவரின் கையெழுத்து

தேதி :

பெற்றோர் / பாதுகாவலரின் கையெழுத்து

42. கீழ்க்கண்ட பத்தியை மொழிபெயர்க்க.

*Among the five geographical divisions of the Tamil country in Sangam literature, the Marutam region was fit for cultivation, as it had the most fertile lands. The prosperity of a farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensable by the ancient Tamils.*

*(அல்லது)*

மொழிபெயர்க்க.

*(i) If you talk to a man in a language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart –* ***Nelson Mandela***

*(ii) Language is the road map of a culture. It tells you where its people come from and where they are going –* ***Rita Mae Brown***

42. குறிப்பு : காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா. **5 X 2 = 10**

கச்சிதமான உருவம், கனமான உள்ளடக்கம், வலுவான நடை, புதுக்கருத்துகள், புதுவிளக்கங்கள், ஆழம், கனம் இந்த உள்ளடக்கங்களை ஜெயகாந்தனின் சிறுகதைகளில் முழுமையாகக் காணலாம், அதுமட்டுமின்றிப் பலதிறப்பட்ட சூழ்நிலைகளையும் வெற்றிகரமாகச் சித்தரிப்பது இவருடைய அரிய சாதனை.

நேர்கொண்ட ஆனால் வித்தியாசமான பார்வை. நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள், திமிர்ந்த ஞானச் செருக்கு, கம்பீரமான குரல், வளமான, புதுமையான வாழ்க்கைச் சித்தரிப்புகள் – இவைகள்தாம் ஜெயகாந்தன் என்ற செம்மாந்த தமிழனின் சிறப்பான அடையாளங்கள். 'படிக்காத மேதை' என்று குறிப்பிடப்படும் அவர், முறையாகக் கல்லூரிகளில் படிக்கவில்லையே தவிர, தமிழ், இந்திய இலக்கியங்களை மட்டுமன்றி, சோவியத் பிரெஞ்சு இலக்கியங்களைத் தானே படித்து உணர்ந்தது மட்டுமன்றி, வாழ்க்கையையும் ஆழமாகப் படித்தவர். பிறகு அவற்றைச் சொற்களில் அழகுறப் படைத்தவர்.

(i) ஜெயகாந்தன் சிறுகதைகள் எப்படிப்பட்டவை ?

(ii) ஜெயகாந்தனின் அரிய சாதனையாக எதனைக் கூறலாம் ?

(iii) 'படிக்காத மேதை' ஜெயகாந்தன் விரும்பிப் படித்து உணர்ந்த இலக்கியங்கள் எவை ?

(iv) ஜெயகாந்தனின் அடையாளங்கள் என்று எவற்றைக் குறிப்பிடலாம் ?

(v) இலக்கியங்கள் தவிர்த்து வேறு எதனை ஜெயகாந்தன் ஆழமாகப் படித்தார் ?

## பகுதி – IV
## மதிப்பெண்கள் : 16

**விரிவாக விடையளிக்க.** **2 X 8 = 16**

43. அ) மாநில அளவில் நடைபெற்ற **"மரம் இயற்கையின் வரம்"** எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

*(அல்லது)*

ஆ) உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. இரவில் சாலையில் நடந்துசெல்வோருக்கும் வாகன ஓட்டிகளுக்கும் ஏற்படும் இடையூறுகளை எழுதி, அவற்றைச் சரிசெய்யும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.

44. அ) பள்ளி ஆண்டு விழா மலருக்காக, நீங்கள் பள்ளி நூலகத்தில் படித்த கதை / கட்டுரை / சிறுகதை / கவிதை இவற்றில் ஏதேனும் ஒரு நூலுக்கான **மதிப்புரையை** எழுதுக.

குறிப்பு : நூலின் தலைப்பு – நூலின் மையப்பொருள் – மொழிநடை – வெளிப்படுத்தும் கருத்து – நூலின் நயம் – நூல் கட்டமைப்பு – சிறப்புக்கூறு – நூல் ஆசிரியர் – நூலைக் குறித்த தங்களின் பொதுவான கருத்து.

*(அல்லது)*

ஆ) குமரிக் கடல்முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத் தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலா தந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து இவற்றையெல்லாம் அணியாகப் பூட்டி, அழகினைக் கூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள். – இக்கருத்துக்களைக் கருவாகக் கொண்டு கட்டுரை எழுதுக.